இன்று
என்றும்
நன்று

2026
ஜூலை
16–31

இன்று மின்னிதழ்

www.indhru.in

இன்று மின்னிதழ் இலவச மாதமிருமுறை

என் வீட்டு தோட்டம் சிறப்பிதழ்

இன்று மின்னிதழ்

இன்று ஆசிரியரிடமிருந்து

அனைவருக்கும் வணக்கம். எங்கள் வீட்டுத்தோட்டம் சிறப்பிதழுக்கு பலரும் படைப்புகள் அனுப்பியுள்ளனர். சிலர் தங்களுக்கு பிடித்த தாவரத்தை விவரித்துள்ளனர். சிலர் தோட்டம் தொடர்பான படைப்புகளை அனுப்பியுள்ளனர். அருமை. அனைவருக்கும் வாழ்த்துக்கள். அடுத்த ஆகஸ்ட் 2026 இன்று இதழ் திரு.அருண்பிரகாஷ் சிறப்பாசிரியராக இதழை தயாரிக்கிறார். அவருக்கு வாழ்த்துக்கள். எழுதுங்கள்...

எல்லா நாளும்...

அனைவருக்கும் நன்றி...

ஆசிரியர் வெ.கோபிநாத்,
Whatsapp : 7094053241
e.mail– indhrumail@gmail.com
Web Site : www.indhru.in


ஆகஸ்ட் 2026

இன்று மின்னிதழ் சிறப்பாசிரியர்

திரு.சு.அருண்பிரகாஷ்



தோட்டம் !



பி. ஆர்.கிரிஜா

எங்கள் வீட்டுத் தோட்டம்
அழகாய் மிளிரும் தோட்டம்
வெண்டை, புடலை, கத்திரி, மிளகாய், பூசணி,
நெல்லி, அவரை, துளசி, மல்லி, முல்லை,
ரோஜா, செவ்வந்தி அனைத்தும் செழித்து
வளரும் தோட்டம்
காலை மாலை இருவேளை
அன்பாய் அம்மா நீர் பாய்ச்ச
குட்டிப் பெண்ணும் அக்கறையுடன்
எரு போட
மலர்ந்து பூக்கள் சிரிக்கையிலே
கனியும் காயும் மகிழ்ந்தாட
குறும்புச் சிறுவன் செல்லமாய் அதனுடன்
உரையாட
வாசனை துளைக்கும் தோட்டம்
எங்கள் வீட்டுத் தோட்டம்
எப்போதும் அழகாய்
மிளிரும் தோட்டம் !


இன்று மின்னிதழ்

எங்கள் வீட்டுத் தோட்டம்



கோவைக்கவி புவனா.

வேத ஆகமத்தின் ஏதேன்
தோட்டம் போல – யசோதையும் குட்டிக்
கண்ணனும் வாழ்ந்த பிருந்தாவனம்
போல – ஒரு மரம் நட்டு அதில்
யாரேனும் பயனடைந்தால் – அதுவே
நாம் செய்த ஆகச் சிறந்த தர்மம் என்றே
உரைத்த நபிகள் நாயகத்தின் வேதம்
போல –எங்கள் வீட்டைச் சுற்றிலும்
ஏதேனோ, பிருந்தாவனமோ,
இயற்கையின் எழிலோ,
ஒரு குட்டி அமேசான் காடோ, இந்தப்
புவனாவின் குட்டிப் புவன வனமதுவோ
என்பதைப் போல –
எங்கள் வீட்டுக் கொல்லைப்புறக்
கதவைத் திறந்தாலே
அழகே எழிலே இயற்கை அன்னை
எங்களுக்கு நல்கிய
அருட்கொடையும் அதுவே!
என்னைப் பொறுத்தவரை எங்கள்
வீட்டில் உள்ள மரம், செடி, கொடி
அத்தனையும் என் நட்பூக்களே!
எனது எழில்மிகு உற்ற தோழன்,
தோழிகளே! நம் ஆயுள் காலமும் கூட
நாம் நம் மன அழுத்தத்திலிருந்தும் மீள
பூலோகம் வந்த தன்வந்திரியும்
தேவர்களும் அவர்களே நோய்
நொடிகளைத் தீர்த்து தனது வேர்,
தண்டு, பட்டை, இலை, பூ, காய், கனிகள்
முதல் நம் உடலுக்கு
ஆரோக்கியத்தையும் சக்தியையும்
அருளும் அட்சயப் பாத்திரமும்
அவர்களே! அதனால் –
எனது உற்ற தோழர், தோழிகளே
குறைந்த இடமே ஆயினுமென்ன –
கொத்துமல்லி, புதினா, வெந்தயக்கீரை,
கீரை வகைகள், சின்னச் சின்னக்
காய்கறிச் செடிகளையாவது
வளர்ப்போம்!
நம் வருங்காலச் சந்ததியும் நாமும்
சுவாசிக்க நல் உயிர்க் காற்றை
இலவசமாய் நல்கும் மரங்களை
நடுவோம்! வான் மழை பெறுவோம்!












இன்று மின்னிதழ்

எனக்குப் பிடித்த செடி



முத்து ஆனந்த் வேலூர்



எனக்குப் பொதுவாக நிறையப் பூச்செடிகளும் காய்கறிச் செடிகளும் பிடிக்கும். இதில் முதலில் பிடித்தது ரோஜாப்பூச் செடிதான்.

ரோஜாப்பூவில் எனக்கு எல்லா வகையான ரோஜாக்களும் எல்லா நிற ரோஜாக்களுமே பிடிக்கும். அவ்வளவு ஏன் 'பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட ரோஜாப்பூக்களைக்கூட' எனக்கு மிகவும் பிடிக்கும்.

நான் ரோஜாப்பூந்தோட்டம் தைப் பார்த்து மகிழவே ஒரு முறை சண்டிகருக்குச் சென்றேன். அங்குள்ள 1600 வகையான ரோஜாச் செடிகளை ரசிக்க எனக்கு அரை நாளுக்கும் மேலானது. ரோஜாப்பூச் செடிகளை நான் வியப்பாக ரசித்த போது அங்கிருந்து வருவதற்கே எனக்கு மனம் வரவில்லை.

சண்டிகர் ரோஜாப்பூந்தோட்டத்தின் பெயர் 'ஜாகிர் உசேன் ரோஜாத் தோட்டம்' இது ஆசியாவிலேயே மிகப் பெரியது. 1967ம் வருடம் உருவாக்கப்பட்ட இந்தத் தோட்டம் 30 ஏக்கர்கள் பரப்பளவைக் கொண்டது. இந்ததத் தோட்டத்தில் 50,000க்கும் அதிகமான ரோஜாச் செடிகள் இருக்கின்றன. இந்த ரோஜாச் செடிகளில் 1600 வகைகள் உள்ளன.

இங்கு பார்வை நேரம்: தினமும் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை.

இதற்காகப் பார்வைக் கட்டணம் எதுவும் கிடையாது. முற்றிலும் இலவசம்.

டிசம்பர் மாதத்தில் தொடங்கி பிப்ரவரி மாதம் வரை இங்கு எந்த நாளில் சென்றாலும் பூத்துக் குலுங்கும் பேரழகைக் கண்டு ரசிக்கலாம்.

இங்கு ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் 'ரோஜாத் திருவிழா' நடத்தப்படுகிறது.

நான் 'ஸ்மார்ட் போன், பட்டன் போனெல்லாம்' வருவதற்கு முன்பாகவே 'இன்லாண்ட் லெட்டர் ' எனப்படும் 'உள்நாட்டுக் கடிதத்தில்' கையால் எழுதி நகல் பிரதிகள் எடுத்து அனுப்பும் 'ரோஜா' என்னும் இதழ் நடத்தினேன். இதில் அந்த 3 பக்கங்களிலேயே மாதமிருமுறை என குட்டிக் கவிதைகள், குட்டிக் கதைகள், கேள்வி பதில், தொடர் கதை, குட்டிக் குட்டிப் பொது அறிவுத் தகவல்கள் என் எல்லாப் பகுதிகளும் அதில் இடம் பெற்றிருந்தது. தொடர்ந்து நடத்த இயலாததால் சில மாதங்களில் ரோஜா இதழை நிறுத்தி விட்டேன்.

ஆக–ரோஜா என்றால் எனக்கு அவ்வளவு உயிர்.

எங்கள் வீட்டு தோட்டம்



திருச்சிற்றம்பலம் சுரேஷ்



எங்கள் வீட்டு தோட்டம் மிக மிக சிறிய தோட்டம். அதில் வாழை, முருங்கை, செம்பருத்தி, வெற்றிலை, கற்றாழை, மிளகாய் உள்ளது.

பண்ருட்டி–க்கும் கடலுருக்கும் இடையில் எங்கள் ஊர் உள்ளது (திருக்கண்டேஸ்வரம்)

திருக்கண்டேஸ்வரம்...! அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், நடனபாதேஸ்வர் பாடி சென்று உள்ளார். புகழ் பெற்ற பாடல் பெற்ற ஸ்தலம். நெல்லிக்குப்பம். வெற்றிலை, கரும்புக்கு பெயர் பெற்ற ஊர். இந்த ஊரில் புகழ்பெற்ற பாரி சர்க்கரை ஆலை உள்ளது. இங்கு சிவன் கோயில் உள்ளது பண்ருட்டி பலாவுக்கு பெயர் பெற்ற ஊர். செம்மண் நிலம் கொண்ட பகுதி. எங்கு திரும்பினாலும் முந்திரி ஆலை காணப்படும் குடிசை தொழிலாய். பண்ருட்டிக்கு அருகில் வடலூர் உள்ளது. சுத்த சன்மார்க்கம் உருவாக்கிய வள்ளலார் வாழ்ந்த ஊர். அவர் பிறந்த நாளை தைபூசமாக கொண்டாடப்பட்டுவருகிறது.





எங்கள் வீட்டுத் தோட்டம்

சங்கரி முத்தரசு, கோயம்புத்தூர்

செடி என்றாலே எனக்கு மிகவும் பிடிக்கும். என் குழந்தைகளுக்கு செடி, மரம் பூக்கள் ,காய்கள் எப்படி வளர்கிறது என்பதை தெரியப்படுத்துவதற்கும் , மருத்துவக் கீரைகள் வளர்ப்பதற்கும்,சளி, இருமல், காய்ச்சல் போன்ற சிறு, சிறு நோய் தொற்றுக்கள் வந்தால் உடனே மருத்துவரிடம் ஓடாமல் கவனித்துக் கொள்ளவும் தோட்டம் பயனுள்ளதாக அமைகிறது.

பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்காமல் வீட்டு உரத்தையே பயன்படுத்துகிறேன்.

மாங்காய், வாழை, முருங்கை, கொய்யா, மாதுளை, பெரிய நெல்லி, துளசி, தூதுவளை,, கண்டங்கத்தரி கற்பூரவள்ளி, செடி பசலை, கொடி பசலை கோவக்காய் ,மணத்தக்காளி, மிளகாய் போன்ற சிறு செடிகளையும் வளர்க்கிறேன்.

எனக்கு மட்டும் பயன்பெறாமல் அருகில் இருக்கும் வீடுகளுக்கும் கொடுத்து உதவுகிறேன்.

என் தோட்டத்தில் வெற்றிலை செடியும் உண்டு. பூக்களில் செம்பருத்தி, சாதி, மல்லி அடுக்கு மல்லி செவ்வரளி, மஞ்ச அரளி , பன்னீர் ரோஸ், ஒயிட் ரோஸ் மனம் இல்லாத அழகு மலர்களையும் வளர்க்கிறேன்.

என் குழந்தைகளுக்கு செடி வளர்க்கும் முறையை சொல்லிக் கொடுத்தேன்.






"கொரோனா தொற்று" காலத்தில் எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என் தோட்டம் .

காலையில் எழுந்தவுடன் என் செடிகளை பார்த்துவிட்டு வந்தால் தான் எனக்கு நிம்மதி.

தினமும் பூஜைக்கு தேவையான பூக்களையும் எங்கள் வீட்டுக்கு தேவையான பூக்களையும் என் செடியிலேயே வளர்த்து விடுகிறேன்.

அனைவரது வீட்டிலும் ஒரு சிறு தோட்டமாவது வேண்டும்.





இன்று மின்னிதழ்

எங்கள் வீட்டுத் தோட்டம்

மல்லிகா கோபால்
லாஸ்பேட், புதுச்சேரி

தோட்டம் அமைப்பது என்பது ஒரு (**Emotion**) உணர்வு.. அந்த உணர்வு நம் உணர்வுடன் கலந்தால் தான் ஒளி பெறும். எனக்கும் என் தாய் வீட்டில் தொடர்ந்த அந்த உணர்வு, பாசம் என் புகுந்த வீட்டிலும் தொடர்ந்தது. பல வருடங்கள் பல பணிகளுக்கு இடையே நான் வளர, வளர அதுவும் என்னுடன் வளர்ந்தது. என் கனவுகள் நனவாயின. என்னுடைய (**stress**) ஒடுக்கப்பட்டது. என் ஓய்வு நேரம் ஒழுங்குப் படுத்தப்பட்டது.
நான் கேட்டதை கொடுத்தது. ஆண்டவன் பூஜைக்கு மலர் அன்றாடம் அள்ளி வழங்கியது. விழாவிற்கு தலையில் சூட வேண்டுமா? விரைந்து தந்தது. நண்பர்களுக்கு உறவினர்களுக்கு தேவை என்றாலும் அவர்களுக்கும் கொடுத்து என்னை வள்ளல் ஆக்கியது. கண்ணுக்கோ குளிர்ச்சி. மனதுக்கோ மகிழ்ச்சி .
மழைக்கால மேகமாய் மாறி பூமாரியாய் பொழிந்தது. வாடிய போதெல்லாம் நானும் வள்ளலார் போல் வாடினேன். உடன் நீர் பாய்ச்சினேன். அழகிய மாடியில் ஐந்து கட்டமாக பாத்திகள் என் கணவர் அமைத்துக் கொடுத்தார். ராமர் பாலம் கட்ட உதவிய அணில்கள் போல் தோன்றியது. உரமிட்டு அதற்கு மேலும் மெருகூட்ட ஞாயிறு காலை அதற்காக வரையறுக்கப்பட்டது. அன்றாடக் காய்கறிக் கழிவுகள் வீணாக்கப்படாமல் தரமான உரமாக மாறியது. ஒரு பாத்தியில் காய்கறிகளும், ஒரு பாத்தியில் வாசனை மலர்களும், ஒரு பாத்தியில் பூஜை மலர்களும், ஒரு பாத்தியில் கீரை வகைகளும் ஒரு பாத்தியில் பழ வகைகளும் பயிரிடப்பட்டு நாங்களும் அறுவடை செய்து, சுவைத்து ,பகிர்ந்து மகிழ்ந்தோம். ஒரு ஆரோக்கியமான சூழலில் என் குழந்தைகள் வளர அது





கைக்கொடுத்தது. நான் பள்ளித் துணை ஆய்வாளராக பணியாற்றியபோது என் வீட்டு மாடித் தோட்டத்தை பலப் பள்ளிகள் உள்ளூர் சுற்றுலாவில் ஒரு அங்கமாக உருவாக்கப்பட்டு பார்வையிட்டனர். பலருக்கும் நாற்றுகள் வழங்கி மகிழ்ந்தேன். பின்பல பள்ளிகளில் தோட்டங்கள் உருவாக வழி வகுத்ததில், பல பள்ளிகள்இன்று பின்பற்றிப் பரிசுகள் பெற்று வருகின்றன. இப்படி மகிழ்ச்சியை அள்ளித்தந்த என் மாடித்தோட்டம் நான் ஓய்வு பெற்றதும் தொடர முடியாத காரணத்தால் என்னை வருத்தத்தில் தள்ளிவிட்டது. முதுமை மற்றும் பராமரிப்பு காரணமாக என்னுடன் 40 வருடப்பயணத்தில் என்னுடன்வலம் வந்த என் தோட்டம் ஒரு முற்றுப்புள்ளியை அடைந்தாலும், பலருக்கு என் செடிகளும், கொடிகளும் கொடுக்கப்பட்டு பலர் தோட்டத்தில் மலர்ந்து மிளிர்கின்றன. இன்று மின்னிதழ் இந்த அறிவிப்பைப் பற்றி கூறும் போது என் தோட்டத்தின் மலரும் நினைவுகளை சமர்ப்பித்து உள்ளேன் . நான் மாடித் தோட்டத்தை வைத்து பராமரித்து மகிழ்ந்ததை கட்டுரையாக வடித்துள்ளேன். கட்டுரையை பதிவிட்டு என்னையும் என் மாடித் தோட்டத்தையும் சிறப்பித்தால் மகிழ்ச்சி அடைவேன். வணக்கம்! நன்றி!

இன்று மின்னிதழ்

எங்கள் வீட்டுத் தோட்டம்

–சின்னஞ்சிறுகோபு,
பியோரியா, வட அமெரிக்கா.

நான் இப்போது வட அமெரிக்காவில் இல்லினாய்ஸ் மாகாணத்தில் உள்ள பியோரியா என்ற ஊரில் எனது மகள் வீட்டில் வசிக்கிறேன். ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை இங்கே வந்து தங்கிவிட்டு, இந்தியா திரும்புவது என் வழக்கம். இந்த பகுதியுள்ள கிராமங்களில் வாசலில் அழகுக்காக விதம் விதமாக பூச்செடிகள் இருக்கும். ஆனால் கொல்லையில் எதையும் பயிரிடமாட்டார்கள். பொதுவாக கொல்லையில் ஒரே ஒரு மரம்தான் இருக்கும். அவைகளும் பொருளாதார விதத்தில் காயோ, கனியோ தராத மரங்கள். மற்றபடி வீட்டுக்கொல்லை முழுவதும் புற்கள்தான் இருக்கும். அந்த புல்தரையையும் ஒருவிரல் உயர்த்துக்குமேல் வளராதபடி புல்வெட்டும் மிஷினை வைத்து அவ்வப்போது வெட்டிக்கொண்டே இருப்பார்கள். அதனால் ஒவ்வொரு வீட்டிலும் புல்வெட்டும் மிஷின்கள் நிச்சயம் இருக்கும். வீட்டுக்கொல்லையையும் தெரு வாசல்களையும் அழகாக பராமரிக்கா விட்டால் அதை மற்றவர்கள் கௌரவ குறைவாக நினைப்பார்கள். அதோடு ஊராட்சியிலிருந்து அபராதமும் போடக்கூடிய நிலையும் ஏற்படும்.



இங்கே ஆடு மாடு கோழிப்போன்ற வீட்டு விலங்குகளை மனிதர்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளில் வளர்க்க மாட்டார்கள். அவைகளை பண்ணைகள் வைத்து வளர்க்கவே அனுமதி உண்டு. அது போல வீட்டுக்கொல்லையில் காய்கறிகள் பயிரிட தடை இல்லையென்றாலும் பொதுவாக இங்குள்ள வெள்ளைக்காரர்கள் கொல்லையில் எதுவும் பயிரிடுவதில்லை. இங்கே வசிக்கும் இந்தியர்கள், வங்காளதேசத்தவர்கள் போன்றவர்களில் சிலர்தான் காய்கறிகளை வீட்டுக்கொல்லையில் பயிரிடுவதுண்டு.

எனது மகள் வீட்டில் என் மனைவியின் முயற்சியால் நான்கு வருடத்திற்கு முன்பு இங்கே, சுற்றிலும் இரும்பு கேட்டுகள் அமைத்து, பலகைகளால் பாத்தியமைத்து, சத்துள்ள மண்மூட்டைகள் வாங்கி வந்துக்கொட்டி, தக்காளி, மிளகாய், அவரை, கத்தரி, பீர்க்கை, முட்டைக்கோஸ், முள்ளங்கி போன்றவைகளை பயிரிட்டோம். சென்ற இரண்டு வருடங்களில் தக்காளியும் மிளகாயும் காய்த்து தள்ளிவிட்டது. பறித்து பறித்து மாளவில்லை. இதையெல்லாம் அக்கம் பக்கத்து வீட்டு வெள்ளைக்காரர்களிடம் கொடுத்தால் வாங்க மாட்டார்கள். கடையில் கொடுத்தும் விற்கமுடியாது.

இங்கே தெருவில் ஆடு, மாடு, கோழிப்போன்ற வளர்ப்பு உயிரினங்களை தெருவில் பார்க்க முடியாது. அதுபோல தெரு நாய்களும் எங்கும் கிடையாது. அப்புறம் எதற்கு காய்கறித்தோட்டத்திற்கு வேலி என்கிறீர்களா? இங்கேயெல்லாம் முயல்கள் உண்டு. அவை யாரும் வளர்க்காத வன உயிரினங்கள். அவைகள் வேலி இல்லாவிட்டால் எல்லாவற்றையும் தின்று



அழித்துவிடும். அமெரிக்காவிற்கு வந்தும் வீட்டுத்தோட்டம் போடுவது நல்ல பயனுள்ள பொழுதுபோக்குதான்!

இன்று மின்னிதழ்

எங்கள் வீட்டு தோட்டம்

G.வித்யாலட்சுமி, சென்னை



எனக்கு மாடித்தோட்டம் அமைப்பதில் அவ்வளவு ஈடுபாடு இல்லை. இருப்பினும் என் அம்மா வீட்டில் தோட்டம் அமைத்து அம்மா பெருமைப்படுவதைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். பிறகு புகுந்த வீடு வந்ததும், அங்கும் என் மாமியார் அவர்களுக்கும் அதில் அதீத ஈடுபாடு இருப்பதை கண்டு நானும் கொஞ்சம் கொஞ்சமா என்னை அதில் ஈடுபடுத்திக் கொண்டேன் . இப்போது என்னுடைய வாழ்க்கையில் அது ஒரு அங்கமாக மாறிவிட்டது. காலையில் பூஜைக்கு மலர்கள் வேண்டுமா மாடி சென்றால் கிடைக்கிறது. ரசம் வைக்க தக்காளி வேண்டுமா?? மாடி ஏறினால் உடன் கிடைக்கிறது. இப்படி எங்கள் தேவைகள் எல்லாம் உடனுக்குடன் நிறைவேற்றப்படுகிறது . மாடித் தோட்டத்தில் காய்க்கும் பச்சை மிளகாயின் மணமோமணம். மாலை தோட்டத்து அருகில் அமர்ந்து ஓய்வெடுத்தால் ரம்யமான காற்று தென்றலாய் வீசுகிறது. எங்களுக்கும் ஓய்வு நேரத்தில் குழந்தைகளுடன் தோட்டப்பணியில் ஈடுபடுவதால் அவர்களுக்கு இயற்கையின் அவசியத்தை புகுத்துகிறது . ஒன்றல்ல, இரண்டல்ல ஏராளமான பயன்கள் அறிந்துக் கொண்டோம். இன்று குடும்பத்துடன் செடி வளர்க்கும் ஆர்வம் ஆர்வம் எங்களுக்கு ஒரு நல்ல கூட்டு முயற்சியை வளர்க்கிறது. குழந்தைகளும் கைப்பேசி தொல்லையிலிருந்து விடுபட்டு இதில் ஈடுபடுவதால் அவர்களுக்கு நல்ல ஒரு ஆரோக்கியமான வாழ்வு தரப்படுகிறது. பல விழாக்களுக்கும் நாங்களே பல நாற்றுகளைப் பரிசாக கொடுக்கும் அளவிற்கு எங்கள் தோட்டம் வளர்ந்துள்ளது.
அடுப்பங்கரை காய்கறி கழிவுகளும்



அழகாக உரமாக மாற்றப்படுகிறது. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம் ஏராளமான பயன்களை.... என் வீட்டுத் தோட்டத்தை எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றிகள்.

எனக்குப் பிடித்த செடி –

ஜாதி மல்லி நறுமணத்திற்கும் அழகுக்கும் மிகவும் பிரபலமானது

இந்தப் பூ நட்சத்திர வடிவில் மிகவும் வியப்பைத் தரும் வகையில் இருக்கும்.


இந்த மலரின் வாசம் ஒவ்வொரு நேரத்திற்கு ஒரு மாதிரியிருப்பது ஓர் அழகான அதிசயம். இதை வீட்டின் தோட்டத்தில் மட்டுமல்ல மாடியில் அல்லது அகலமான மாடிப் படிகளின் ஓரங்களிலும் கூடத் தொட்டி வைத்து வளர்க்கலாம்.

என் மனைவிக்கு ரோஜாப்பூதான் பிடிக்குமென்றாலும் நான் வாங்கித் தரும் ஜாதி மல்லிப் பூச்சரத்தை மிகவும் ஆசையாக வைத்துக் கொள்வார்.

ஜாதி மல்லிப் பூச்செடிக்கு அதிக சூரிய ஒளி மற்றும் தேவையான நீர் இருந்தால் தான் செழிப்பாகப் பூக்கும்.

ஜாதி மல்லிப் பூச்செடி யின் இலைகள் ஆயுர்வேத மருத்துவத்திற்குப் பயன்படுகின்றன.

இத்தனை சிறப்புப் பெற்ற ஜாதி மல்லியை எனக்குப் பிடிக்க இன்னமும் காரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.



ஆ. மதிவாணன் வேலூர்

இன்று மின்னிதழ்

எங்கள் வீட்டு தோட்டம்

நம்.திரு.ரஅம்ஏச், அரியலூர்

எனது தந்தையார் திரு.திருவேங்கடம் அவர்கள் உருவாக்கி வைத்த தோட்டம். அழகானது. ஆசை ஆசையாய் அவர் வைத்த செடிகள் அவர் மறைந்தும் வாழ்ந்து வருகின்றன. நான் தோட்ட வேலை செய்யும் போதெல்லாம் அவருடன் நான் இருப்பது போன்ற ஒரு உணர்வு இருக்கும்.

இங்கு பல்வேறு விதமான செடிகள் இருந்தாலும் வாழை தான் அதிக அளவில் எங்களுக்கு பலன் தருகிறது. தினசரி இலை பயன்படுத்துகிறோம். மற்றும் வாழை பூ, தண்டு, வாழைப்பழம் என்று பல்வேறு நன்மைகளைத் தந்து கொண்டே இருக்கின்றன.

எங்கள் தோட்டத்தில் நந்தியாவட்டை, கனகாம்பரம், டிசம்பர் பூ, மருதாணி, இக்சோரா, சூபா புள், செம்பருத்தி, சந்தன முல்லை, சங்குப்பூ, பவளமல்லி, அடுக்கு மல்லி, வாழை, கரும்பு, சுண்டை, கொய்யா, எலுமிச்சை, கறிவேப்பிலை, சீதாப்பழம், முடக்கத்தான், முருங்கை, பொன்னாங்கன்னி, துளசி, பிரண்டை, ரணகல்லி, வெற்றிலை, கற்றாழை, கற்பூரவள்ளி, சேனைக்கிழங்கு என்று இத்தனை வகைகள் உள்ளன.

இதன் பயன்கள் அனைத்தும் அருகில் உள்ள வீடுகளுக்கும் கொடுப்போம். தினசரி பறவைகள், பட்டாம்பூச்சிகள், தட்டான்கள் எங்கள் தோட்டத்தை வலம் வரும்.



இத்தோட்டத்திற்கு என் கடைசி அக்காவின் பெயரான ஸ்வர்ணா என்பதை சோனா கார்டன் என்று என் அப்பா அழைப்பார். இதில் சொர்ணா என்பது என் பாட்டி (அப்பாவின் அம்மா) பெயரின் நினைவாக அக்காவுக்கு வைத்தார்கள்.

இதில் சூபா புள் என்பது மரம் போன்ற புள் வகை. அதை மாடு வைத்திருக்கும் ஒரு நண்பர் வெட்டிச்செல்வார். முல்லைப்பூ தினசரி ஒரு முழம் அளவுக்கு பறிப்போம். துளசி எப்போதும் கிடைக்கும்.

இப்படி எங்கள் தோட்டத்தைப்பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்...

சோனா கார்டனின் பராமரிப்பாளன் என்பதில் பெருமையடைகிறேன்.



இன்று மின்னிதழ்



முத்து ஆனந்த், வேலூர்

சிறை

நான்
சிறைப்பட்டிருப்பது
உன்
இதயத்திலென்றால்
அது(வும்)கூட
எனக்கு சுகம்தான்

சிறை

உன்
வேட்டையில்
நீ
என்னைச்
சிறைப்படுத்திய பிறகு
அதற்குக்
காதல் என்னும்
பெயரிடுகிறாய்!

சிறை

உன்
விழிகளிலுள்ள
தோட்டாக்கள்
என்
மீது பாய்ந்த பிறகு
நான்
காதல் என்னும்
சிறையிலிருந்து
தப்பிக்க இயலுமா
என்ன?!

சிறை

ஆயுள் தண்டனை
என்பது
பதினான்கு வருடமாமே!
ஆனால்
நான்
உன்னிடம்
சிறைப்பட்டிருப்பது
ஆயுள் முழுக்கத்தானே
அன்பே!

சிறை

நீ
என்னைச்
சிறைப்படுத்திய
பிறகுதான்
காதல்
இவ்வளவு
அழகாக இருக்கும்
ரகசியம்
எனக்குத்
தெரிந்தது!

சிறை

நீ
உன்
காதலில்
என்னைச்
சிறைப்படுத்தும்
வரையில்
நான்
பசித்திருந்தேன்
தனித்திருந்தேன்
விழித்திருந்தேன்!

சிறை

சாளரச் சிறை
வழியே தான்
உன்
கண்களைப் படித்தேன்!
ஆனாலும்
உனக்காகக்
காதலெனும்
மாலிகை கட்ட
ஆவலிலிருக்கிறது
என்
மனம்!

சிறை

உன்னையே
சுற்றிச் சுற்றி
வருகிறேன்!
எதற்குத் தெரியுமா?
உன்னை
என்
கண்களால் கைது
செய்து
என்
இதயச் சிறையில்
அடைக்கத்தான்!



தோட்டம்

மலர்மதி



வீரப்பன் வீட்டுக்கு திடீர் விருந்தாளிகள் வந்தனர். அன்றைக்குப் பார்த்து கடையடைப்பு, அர்த்தால் நடந்தது. என்ன பண்ணுவது? யோசித்த வீரப்பனுக்கு வீட்டின் பின்புறம் தோட்டம் போட்டிருப்பது நினைவுக்கு வந்தது. அதிலிருந்து பலவித காய்கறிகளைப் பறித்து விருந்துவைத்து விருந்தாளிகளை மகிழ்வித்தார் வீரப்பன்.



ஆகஸ்ட் 1-15
சிறப்பாசிரியர்
சு.அருண்பிரகாஷ்

முடிஞ்சா ஒரு வேலை இப்படி சாப்புடுங்க.... 2



அவித்த நிலக்கடலை,
ஊறவைத்த பாதாம்
பருப்பு,
கொண்டைக்கடலை
குருமா, கீரை

இன்று மின்னிதழ்

போதை மனம்

எல்லா மனிதருக்கும்
ஏதோ ஒரு போதை
எப்போதும் அவசியமானதாகவே
இருக்கிறது
மனதிற்கு உகந்த போதை
கைகொள்ளாமல்
இயங்கவே முடியாததாகிப் போகிறது
என்பதுதான்
கசப்பான உண்மையும்
இனிப்பான பொய்யுமாக இருக்கிறது.
எந்தப் போதைக்கும்
அடிமையாகாத மனம் எங்குமே
இல்லை
ஆமோதிப்பாய் ஒரு சிறிய
தலையசைப்பு
ஒரு மென் புன்னகை
அன்பு ததும்பும் ஒரு பார்வை
யாவும் போதையில் சேர்த்தித்தான்



ஸ்ரீநிவாஸ் பிரபு

மூவரி கவிதைகள்



(1)
வற்றிய கிணறு
தெரிகிறது அதில்
தாகத்தின் விடாய்

(2)
அமாவாசை இரவு
மின்மினிப் பூச்சிகள்
சுற்றிலும் விண் மீன்கள்

(3)
சட்டியில் சோறு
அகப்பையில் இல்லை
அத்தையின் மனது

(4)
புத்தகக் கட்டு
படியாத விலை
கரையான் வீடு


(5)
வானில் பறக்கும்
அறுந்த பட்டம்
வாண்டுவின் வாட்டம்

சசிகலா விஸ்வநாதன்

டிப்ஸ்

1. மிளகு கொத்தமல்லி விதை வில்வ இலை இவற்றை நன்றாக பொடி செய்து அதை தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி குடித்தால் குடிப்பழக்கத்தில் இரந்து விடுதலை பெறலாம்
2. தொண்டை வலி இருமலுக்கு இரண்டு ஏலக்காயை வாயில் ஒதுக்கி அதன் சாறை சிறிது சிறிதாக அருந்தினால் இருமல் தொண்டை வலி குணமாகும்
3. வேப்பம்பூவை சாப்பிட்டு வந்தால் குடல் சுத்தமாகும் குடலில் உள்ள நோய் கிருமிகள் அழியும்
4. ஆமணக்கு எண்ணெய் தடவி வந்தால் புருவம் நன்றாக வளரும்
5. முளைக்கட்டியை கொண்டக்கடலையை சாப்பிட்டு வந்தால் தலைமுடி நன்றாக வளரும்

நடேஷ் கன்னா, கல்லிடைக்குறிச்சி


இன்று
மின்னிதழ்
திட்டி தீரடி
சண்டை போடடி
உன் மேல் கொண்ட
காதல்
இன்னும் கொஞ்சம்
அதிகமாகட்டும்!
-லி.நௌஷாத் கான்-

இன்று மின்னிதழ்

புதுக்கவிதை

நீ பேசாமல் போவது
என்னை கொலை செய்வதற்கு
சமமானது!

வரமாய் நீ இல்லாத போது
தவங்கள் எதற்கு?

திட்டிக் கொண்டே நீ கொடுக்கும்
கசந்த பில்டர் காபியின்
கடைசி துளி செல்லும் வரை
தொண்டைக் குழி தித்திக்கிறது!

உன்னிடம் வேறென்ன கேட்கப்
போகிறேன்
கொஞ்சம் சக்கரை
தூக்கலாய்
காதலோடு ஒரு காபி!



–லி.நௌஷாத் கான்–

அ → ஆ → இ → ஈ → உ →
ஊ → எ → ஏ → ஐ → ஒ →
ஓ → ஔ--ஃ



எல்லா பிரிவுகளையும்
ஏஐ இணைத்துவிடுகிறது...

எல்லா இணைப்புகளையும்
ஏஐ பிரித்தும்விடுகிறது...

ஆனால் தமிழில்
மட்டும் ஏஐ அருகருகில்...



நம் திரு ரஅம ஏச



ஆகஸ்ட் 1-15
சிறப்பாசிரியர்
சு.அருண்பிரகாஷ்



காதலி : என்னடா இது?

காதலன் : சாரி டி. உன் பிறந்தநாளுக்கு பொக்கே வாங்கிக் குடுக்கற அளவுக்கு எனக்கு வசதி இல்ல. அதான் எங்க வீட்ல இருந்த அரளிப்பூவை இப்படி பொக்கேயா தரேன். வாங்கிக்கடி!



டீ.என்.பாலகிருஷ்ணன்

இன்று மின்னிதழ்

"புழு அரிசி"



முகில் தினகரன்
கோயமுத்தூர்

ஊரில் அன்னதானம். அதன் முக்கிய பொறுப்பை ஏற்றிருந்தார் மளிகைக்கடை தண்டபாணி. "அன்னதானத்துக்கு அரிசி நான் இனாமா தர்றேன்!" பெருமையாகச் சொன்னார்.

ஆனால், அவர் கொடுத்த அரிசி புழுப் பிடித்த பழைய அரிசி.

அதைச் சமைக்க எடுத்த சமையல்கார கோவிந்தன், அதிர்ந்து போனான். "இதை ஏழை மக்கள் சாப்பிட்டா வயிற்றுப் பிரச்சனை வந்துடுமே... அவங்க வைத்தியத்துக்குக் கூட காசில்லாதவங்களாச்சே!" என்று மனம் வருந்தினான்.

கடைசியில், தன் சொந்தப் பணத்தில் நல்ல அரிசி வாங்கிச் சமைத்தான்.

அன்னதானம் மிகச் சிறப்பாக முடிந்தது. ஊர் மக்கள் வயிறு நிறைந்து ஆசீர்வதித்தார்கள்.

ஊர்ப்பெரியவர் தண்டபாணியை அழைத்து, "இவ்வளவு பெரிய தர்மம் செய்திருக்கிறீர்கள்!" என்று பாராட்டி சால்வை அணிவித்தார்.

தண்டபாணி மார்பை நிமிர்த்திக் கொண்டார்.

ஆனால் மறுநாள் காலை முதலே அவருக்கு கடும் வயிற்றுப் போக்கு ஆரம்பமானது. மருந்து எடுத்தும் நிற்கவேயில்லை.

டாக்டர் பார்த்து, "நீங்கள் சாப்பிட்ட உணவில் ஏதாவது கெட்ட அரிசி இருந்திருக்கும்," என்றார்.

அன்றே வீட்டிலிருந்த அரிசியைச் சோதித்தார். அது நல்ல முதல் தர அரிசியாயிருந்தது.

"புழுப் பிடித்த அரிசி சாப்பிட்ட ஊர் மக்கள் நல்லாகவே இருக்காங்க... நல்ல அரிசி சாப்பிட்ட எனக்கேன் இந்த தண்டனை?" என்று யோசித்தார்.

தீராத வயிற்றுப் போக்கிற்காக அடுத்த ஊரிலிருந்த சாமியாரைச் சந்தித்தார். தண்டபாணி.

சாமியார் கண்களை மூடி சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பிறகு சொன்னார் "அன்னதானத்துக்கு நீ கொடுத்த புழு அரிசியால் பல பேருக்கு நோய் வந்திருக்கும். ... சாவு கூட விழுந்திருக்கும்... அந்தப் பாவத்திலிருந்து உன்னைக் காப்பாத்தியது சமையல்கார கோவிந்தன்... அவன் நல்ல மனசு உன் பாவத்தைத் தடுத்தது.... போய் அவன் காலில் விழுந்து மன்னிப்பு கேள்."

தண்டபாணியின் தலை குனிந்தது. உடனே கோவிந்தனிடம் சென்று கண்ணீர் மல்க மன்னிப்பு கேட்டார்.


ஆச்சரியமாக, அவரின் வயிற்றுப் போக்கும் முற்றிலும் நின்று விட்டது.

அதற்குப் பிறகு தண்டபாணி யாரையும் ஏமாற்றவில்லை.

அதிக அலைபேசி பயன்பாடு கண்களுக்கு கேடு

இன்று மின்னிதழ்

அம்மாவே... (மினி கதை)



திருச்சிற்றம்பலம் சுரேஷ்

அம்மாவின் அஸ்தியை கரைத்து விட்டு... தனியே ஊருக்கு செல்ல பஸ் ஏறினான் கவிமணி.

தம்பி... கொஞ்சம் நகர்ந்து உட்காருங்க.

அம்மா... நீங்க எப்படி?

என்ன தம்பி சொல்றீங்க...?

சாரிம்மா...! அம்மாவின் அஸ்தியை கரைத்து விட்டு இப்பதான் ஊருக்கு போக இந்த பஸ் ஏறினேன். நீங்க அசல் என் அம்மா போல இருக்கீங்க. அவங்க.. சற்று சப்பையா இருப்பார்கள். உங்களுக்கும், அவர்களுக்கும். அவ்வளவுதான் வித்தியாசம். என்னுடைய கைபேசியில் என் அம்மாவின் புகைப்படம் நிறைய இருக்கிறது. உங்களுக்கு காட்டுகிறேன். பார்த்தால் நீங்களே அசந்துவிடுவீர்கள். இதுதான் என் அம்மா.

ஆமா தம்பி... அசல் என்னை போலவே இருக்கிறார்கள்.

கேள்விப்பட்டிருக்கேன் ஒரே உருவம் கொண்ட பலர் இருப்பதாக.

சார்.. டிக்கெட்..

அம்மா... நான் மருதூர் போகணும். நீங்கமா...?

மருதுர் தாண்டி..பின் வேறு பஸ் பிடித்து போகணும் தம்பி.

சார்..மருதுருக்கு டிக்கெட் இரண்டு தாங்க.

எதுக்கு தம்பி..?

என் அம்மாவே என் அருகில் உட்கார்ந்து பயணம் செய்வதாக உணர்கிறேன். அம்மா...! ஏதாவது உதவி தேவைப்பட்டால் என்னை கூப்பிடுங்கம்மா... என்று தன்னுடைய கைபேசி நம்பர் தந்துவிட்டு... இறங்கினான் சில மணி துளிக்கு பின்



பாட்டி வைத்தியம்

பீட்ரூட்டை சாப்பிட்டால் நினைவாற்றல் அதிகரிக்கும் ● இரத்தம் விருத்தியாகும் ● கேழ்வரகு பாலில் சர்க்கரை கலந்து சாப்பிட நீர் கடுப்பு குணமாகும் ● வேப்ப எண்ணெய் மஞ்சள் சேர்த்து போட பித்த வெடிப்பு குணமாகும் ● மலை வேம்பு இலையை அரைத்து தலையில் பூச பேன் ஒழியும் ● பாலில் ஒரு ஸ்பூன் தேன் கலந்து குடித்தால் உடல் எடை கூடும். ●

தொகுப்பு
M. ராதாகிருஷ்ணன்,
வாணியம்பாடி -635751

இன்று மின்னிதழ்

அவசர தொலைப்பேசி எண்கள்

List of Emergency Helpline Numbers All Over in India

Helpline Number	Department
100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
104	State level Helpline for Health
108	Disaster Management / Medical Helpline
112	All in One Emergency Number (General Emergency Department of Telecommunications (DoT))
131	Indian Railway General Enquiry
139	Railway Enquiry
181	Domestic abuse and sexual violence-Women's Helpline
197	Directory Enquiry Service
198	Telephone Complaint Booking
1031	Anti Corruption Helpline
1033	Emergency Relief Centre on National Highways
1066	Anti-poison
1071	Air Accident
1072	Train Accident
1073	Road Accident / Traffic Helpline
1090	Anti terror Helpline / Alert All India
1091	Women Helpline in Distress
1092	Earth-quake Helpline Service
1096	Natural Disaster Control Room
1097	AIDS Helpline
1098	Child Abuse Hotline
1099	Central Accident and Trauma Services
1551	Kisan Call Center
1906	LPG Emergency Helpline Number
1910	Blood Bank Information
1919	Eye Donation / Eye Bank Information Service
1947	Aadhar Card - UIDAI (Unique Identification Authority of India), 1800-180-1947
1950	Election Commission of India
1800-11-4000	National Consumer Helpline



நீ

இல்லாத
ஊரிலே

தேரும்
இல்லை

திருவிழாவும்
இல்லை.

நீ

இருக்கும்
ஊரிலே

தினம்
தினமும்

தேர்த்
திருவிழா.

@ ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



சிறை

நீ
உன்
வார்த்தைகளை
சிறைப்படுத்திய
பின்னும்
உன்
மௌனம்
என்னிடம்
மிக அழகாகவே
பேசுகிறது!

முத்து ஆனந்த்,
வேலூர்

அழகின் குவியாடி

உன் பேரழகு முழுவதையும்
தன்னில் கொண்டுவந்து
குவிப்பதால்
உன் வீட்டு
ஆளுயரக் கண்ணாடி கூட
குவியாடி ஆகிவிடுகிறது...
நீ முகம் பார்க்கும்
தருணங்களில்!




சு. அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்
Ph: 8526037792


இன்று
மின்னிதழ்
காதலின்
ஓகப்பெரும்
சுதந்திரமே
பிரிவது தான்...
ரம் திரு ரமேஷ்

இன்று மின்னிதழ்

நூல் விமர்சனம்



நூல் : காத்திருப்பு
ஆசிரியர் : வித்யா மனோகர்
பக்கங்கள்: 102 விலை : ரூ100/-
வெளியீடு : ஒருதுளிக்கவிதை,
புதுச்சேரி, ஆண்டு 2021

'காத்திருப்பு ' என்ற இந்நூல் ,ஆசிரியர் வித்யா மனோகர் அவர்கள் படைத்துள்ள இரண்டாவது நூலாகும். கவிதை இவருக்கு சுவாசக்காற்று என்றால் அது மிகையாகாது. ஈரோடு தமிழன்பன் தனது குறிப்புரையில் நூலாசிரியரை, ' இரண்டாம் காக்கைப்பாடினி' என்று விளித்திருப்பது இதற்குச் சான்று பகரும்.

சென்னை பிறந்த ஊர்; தற்போது புதுச்சேரியில் வசிக்கும் இந்நூலாசிரியர், தமிழ் இலக்கியத்தில் முதுகலை பட்டாதாரியாவார்.

நூல் முழுவதும் எளிமையான பதங்கள் மற்றும் வரிகள்



முகிழ்த்திருப்பது நூலின் வெற்றிக்குப் படிக்கற்களாக உள்ளன. இந்நூலில் காத்திருப்பு1, காத்திருப்பு2 என்று 30 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கவிதையும் ஒரு விதத்தில் வாசிப்பவர்களை ஈர்ப்பதாக உள்ளது. இந்நூலில் பெரும்பாலும் காதல் மண (ன)ம் வீசுவது உண்மை; ஆனால் அது ஆழமாக உள்ளது.

காதலில், எப்போதுமே இன்பம் மட்டும் பூப்பதில்லை. கோபம், வருத்தம், ஊடல் என்று ஏதாவது ஒன்று தோன்றி மறைந்துகொண்டுதானிருக்கும். இருவருக்கும் இடையில் இப்படித்தான் ஒரு சூழ்நிலை உருவாகிவிடுகிறது. கோபத்தில் அவன் உதிர்த்த வார்த்தைகூட அவளைக் காயப்படுத்தவில்லை;மாறாக அவன் காக்கும் மௌனம் அவளைக் கொல்லுகிறது.

'... எங்கும் ஆரவாரம்... எதிலும் அவசரம்...
அரிதாரம் பூசிய முகங்கள்....
பகல் பொய்களைச்
சுமக்கும் கல்லறை.
இரவு வெளிச்சத்தின்
பட்டறை. ' . இந்த நிலை உறவுகளிலும் உள்ளது என்பதனை உணரமுடிகிறது

இப்படி, சொல்ல வரும் கருத்துக்களைச் சிறப்பாகவும் தேவையான இடங்களில் நளினமாகவும், வேண்டிய நேரத்தில் அழுத்தமாகவும் சொல்லியுள்ள விதம் பொருத்தமாக அமைந்துள்ளது பாராட்டுக்குரியதாகும்.

கா. ஹபீப் முகமது.



கதைகளில், கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல. படைப்புகள் கொடுத்த வலைதளங்களுக்கு நன்றி.

அழகிய ஆரம்பம் இன்று மின்னிதழ் வெளியிடுபவர்

ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று மின்னிதழ் - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் : 7094053241

